## களம் காணும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் வெற்றி வேட்பாளர்களை ஆதரித்து

# கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் 2-ஆம் கட்ட தேர்தல் பிரச்சாரம்!

## விருதுநகர் – திருமங்கலத்தில் இன்று உரையாற்றுகிறார்!

**தமிழகம் முழுவதும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்கு சேகரித்து வருகிறார்.**

**இந்த தொடர் பிரச்சாரத்தை தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மார்ச் 31ஆம் தேதி திருவாரூரில் தொடங்கிய நிலையில், இரண்டாம் கட்ட பரப்புரையை ஏப்ரல் 3ஆம் தேதி திருநெல்வேலியில் தொடங்கினார்.**

**இன்று காலை விருதுநகரிலும், மாலையில் திருமங்கலத்திலும் நடைபெறும் மாபெரும் தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் கழகத் தலைவர் அவர்கள் உரையாற்றுகிறார்.**



### தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தேர்தல் சுற்றுப்பயண விவரம்

**05.04.2026 (ஞாயிற்றுக்கிழமை)**

| நேரம் | இடம் | கலந்து கொள்ளும் சட்டமன்றத் தொகுதிகள் |
|---|---|---|
| காலை 9 மணி | விருதுநகர் (பொதுக்கூட்டம்) | சாத்தூர், ராஜபாளையம், சிவகாசி, திருவில்லிபுத்தூர், திருச்சுழி, அருப்புக்கோட்டை, விருதுநகர் |
| மாலை 5 மணி | திருமங்கலம் (பொதுக்கூட்டம்) | மேலூர், மதுரை கிழக்கு, சோழவந்தான், மதுரை வடக்கு, மதுரை தெற்கு, மதுரை மத்தி, மதுரை மேற்கு, திருப்பரங்குன்றம், திருமங்கலம், உசிலம்பட்டி |

**குறிப்பு :** கழகத் தலைவர் அவர்கள் மேற்குறிப்பிட்டுள்ள இடங்களில் பிரச்சாரத்திற்கு குறித்த நேரத்திற்குள் செல்ல வேண்டியுள்ளதால், காலத்தின் அருமை கருதி, எக்காரணம் கொண்டும் கழகத் தோழர்கள், வழியில் வேறு எவ்வித நிகழ்ச்சிகளையும் ஏற்பாடு செய்திட வேண்டாமென கண்டிப்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**தலைமைக் கழகம்,**
**தி.மு.க.**

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை - 18



ஆத்தூர் சட்டமன்றத் தொகுதியில் கழக வேட்பாளராக போட்டியிடும் அமைச்சர் இ.பெரியசாமி தேர்தல் அலுவலரிடம் வேட்பு மனுதாக்கல் செய்தார்.



திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதியில் திமுக சார்பில் 7 முறையாக போட்டியிடும் உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்க துறை அமைச்சர் அர. சக்கரபாணி தேர்தல் நடத்தும் அலுவலர் பிரபு விடம் வேட்பு மனுவை தாக்கல் செய்தார். இந்நிகழ்வின் போது முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் காளியப்பன், தே.மு.தி.க. மேற்கு மாவட்ட செயலாளர் சிவக்குமார், காங்கிரஸ் மாவட்ட துணை செயலாளர் ரகுமான்சேட், நகர் மன்றதலைவர் திருமலைச்சாமி உள்ளிட்டோர் உடனிருந்தனர்.



மதுரை மாநகர் வடக்கு தொகுதி கழக வேட்பாளர் மாநகர் மாவட்டக் கழக செயலாளர் கோ.தளபதி மாநகராட்சி மண்டலத்தில் கழக நிர்வாகிகள் கூட்டணி கட்சியினர் பொதுமக்கள் என ஆயிரக்கணக்கானோருடன் ஊர்வலமாக வந்து தேர்தல் அதிகாரியிடம் வேட்பு மனு தாக்கல் செய்தார். உடன் கூட்டணி கட்சி நிர்வாகிகள் நல்லமணி, மா.கணேசன், பாண்டியராஜன், பிலாலுதீன் ஆகியோர் உடன் உள்ளனர்



மதுரை தெற்கு மாவட்டம் திருமங்கலம் தொகுதி கழக வேட்பாளர் மாவட்ட கழக செயலாளர் சேடப்பட்டி மு.மணிமாறன் கழக நிர்வாகிகள் கூட்டணி கட்சியினர் பொதுமக்கள் என பல்லாயிரக்கணக்கானவருடன் ஊர்வலமாக வந்து திருமங்கலம் கோட்டாட்சியர் அலுவலகத்தில் தேர்தல் அதிகாரியிடம் வேட்பு மனு தாக்கல் செய்தார். உடன் கூட்டணி கட்சி நிர்வாகிகள் ஜெயராமன் உச்சபட்டி உலகநாதன் ராதாகிருஷ்ணன் கலைச்செல்வன் ஆகியோர் உள்ளனர்.